# முன் பருவ குழந்தை பேணுதல் திட்டம்

## Parenting for Early Brain Development Project

### SURVEY ON KNOWLEDGE ATTITUDE AND PRACTICE ON PARENTING
### குழந்தைவளர்ப்பு பற்றிய
### அறிவாற்றல், அணுகுமுறை மற்றும் நடைமுறை மீதான ஆய்வு.

**எதற்காக இந்த ஆய்வு?**

தாய் தந்தை போன்ற முதன்மை குழந்தை பராமரிப்பாளர்களுக்கு இடையே காணப்படும் குழந்தை வளர்ப்பு நடைமுறைகள் பற்றிய தகவல்களை ஆய்வு செய்வதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

நேர்காணலின் போது தாய் தந்தை போன்ற முதன்மை குழந்தை பராமரிப்பாளர்கள் வீட்டில் இல்லையென்றால் , மறுநாளோ அல்லது அவர்கள் இருக்கும் நேரத்திலோ செல்லவேண்டும். அவர்கள் உயிருடன் இல்லையென்றால் அன்றைய நிலையில் குழந்தையை பராமரிப்பவர் யாரோ, அவரிடம் இந்த ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இந்த ஆய்வின் நோக்கமானது:

- பெற்றோர் மற்றும் பராமரிப்பவரிடமிருந்து முழுமையான குழந்தைகள் வளர்ச்சி மற்றும் குழந்தைகள் வளர்ப்பு மீதான உண்மை நிலவரத்தை பற்றிய தகவல்கள் சேகரிப்பதாகும்.
- குறிப்பாக தந்தையிடம் ஏற்படும் அறிவாற்றல், அணுகுமுறை, நடைமுறை ஆகியவற்றின் மாற்றங்கள் மற்றும் முழுமையான குழந்தை வளர்ச்சியில் அதன் தாக்கம் பற்றியும் அளவிடுவதாக அமையும்.

இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோளானது, இந்த பகுதியில், குழந்தை வளர்ப்பில் நிலவும் தற்போதைய நிலையை விவரமாக சொல்வதாக அமையும். தற்போதைய நிலையின் இந்த விளக்கமானது, பெற்றோர்களின் தேவைக்கேற்ப பொருத்தமான இடையீட்டினை ஏற்படுத்த உதவுவது மட்டுமல்லாமல் இடையீட்டினை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை கணக்கீடாகவும் அமையும்.

**யாரெல்லாம் ஆய்வு செய்யப்படுவார்கள்?**

பொது விளக்கம் அல்லது கருத்து ஒன்றை ஆய்வு செய்து பார்க்க 53 கிராமங்களில் , 0 முதல் 24 மாத வயதுடைய குழந்தைகளை பராமரிக்கும் 383 பெற்றோர்/பராமரிப்பவர்கள் ஆய்வு செய்யப்படுவர்.

ஆய்வு செய்பவர்களுக்கான குறிப்புகள்

**ஸ்பீச் (SPEECH) நிறுவனத்தின் ஆதரவு**

- தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமம் மற்றும் ஆய்வு செய்யப்பட வேண்டிய குழந்தையின் பெற்றோர் / பராமரிப்பவரின் பட்டியல் உங்களுக்கு வழங்கப்படும்.
- வீடு பூட்டியிருந்தாலோ அல்லது குழந்தையை பராமரிப்பவர் வீட்டில் இல்லையென்றாலோ, அவரை தவிர்த்துவிட்டு ஆய்வில் பங்கேற்க வேண்டிய பட்டியலில் உள்ள அடுத்த நபரின் வீட்டிற்கு செல்லவும்.
- பூட்டியிருந்த வீட்டில் உள்ளவர்களை, அடுத்த நாள் சென்று, அவர்களிடமிருந்து பெற வேண்டிய தகவல்களை பெற்றுவிட வேண்டும்.

**விவரம் அறிந்து ஒப்புதல் அளித்தல்**

- பதிலளிப்பவரின் கவனம் சிதறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- ஒப்புதல் படிவத்தில் உள்ளவற்றை பதிலளிப்பவருக்கு படித்துக்காட்டவேண்டும். இந்த ஆய்வின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு புரியும்படியாக எடுத்துச் சொல்லவேண்டும்.
- அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்து, பின்னர் ஒப்புதல் படிவத்தில் அவர்களைக் கையெழுத்திட வைப்பதன் மூலம், இந்த ஆய்விற்கான அவர்களுடைய ஒப்புதலை பெற வேண்டும்.
- ஆய்வில் பங்கு கொள்ள ஒரு பெற்றோருக்கு விருப்பம் இல்லையென்றால் அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. பட்டியலில் உள்ள அடுத்த நபரிடம் இந்த ஆய்வைத் தொடரலாம்.

**கேள்வித்தாள்**

- அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பின்னர், ஆய்வு படிவத்திலுள்ள கேள்விகளைக் கேளுங்கள். கேள்விகளை உரக்கப் படிக்க வேண்டும்.
- பதில்களைத் தெளிவாக பென்சிலால் எழுத வேண்டும்.
- பெற்றோருக்கு கேள்வி புரியவில்லையென்றால், மேலும் ஓரிரு முறை அந்தக் கேள்வியை அவர்களிடம் கேட்கலாம். வேறு துணைக் கேள்விகளை கேட்கவோ அல்லது பதிலளிக்க உதவுவதோ கூடாது.
- படிவத்தில் உள்ள பதில்களை படித்து காட்ட வேண்டாம். பெற்றோர்/பராமரிப்பவர் தரும் பதிலை வைத்து, படிவத்தில் உள்ளவற்றில் நெருங்கிய பதிலை தேர்வு செய்து வட்டமிட்டு குறிப்பிட வேண்டும்.
- பட்டியலில் உள்ள அனைவரிடமும் இந்த ஆய்வு நிறைவுபெறும் வரை ஆய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும்.

**ஆய்வு நிறைவு செய்த பின்னர்**

- ஒவ்வொரு பகுதி முடிந்த பின்பும் அனைத்து தகவல்களும் சரியாக நிரப்பப்பட்டுள்ளனவா என்று மீண்டும் ஒருமுறை சரிபார்த்துக்கொள்ளவும்.
- கேள்வி - பதில்கள் நிறைவடைந்தவுடன் , கேள்விகளுக்கு பொறுமையாக பதில் அளித்தமைக்கு பதிலளித்தவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.
- உங்களுடைய மேற்பார்வையாளரின் பார்வைக்கு வைப்பதற்கு முன்னர் மீண்டும் ஒருமுறை அனைத்து தகவல்களையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- மேற்பார்வையாளர், அவருடைய பங்கிற்கு, கணினி தகவல் பதிவிற்கு அனுப்புவதற்கு முன்பாக, அனைத்து தகவல்களையும் ஒரு முறை சரிபார்க்க வேண்டும்.